# காதி நீதிபதிகளை நியமித்தல் — 2026

## நீதிச்சேவை ஆணைக்குழு

முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் பின்வரும் அட்டவணையில் உள்ள பிரதேசங்களுக்கான "காதி" பதவி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக நீதிச்சேவை ஆணைக்குழுவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. பேருவளை | 02. போரா சமூகம் | 03. மொனராகலை |
| 04. நீர்கொழும்பு | 05. யாழ்ப்பாணம் | |

**அடிப்படைத் தகைமைகள்**

- இஸ்லாம் சமயத்தைச் சார்ந்த 40 வயதுக்கு மேற்பட்ட விவாகமான ஆணாக இருத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக இருத்தல் அல்லது
- முஸ்லிம் சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக இருத்தல் அல்லது
- கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக இருத்தல் அல்லது
- சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்கு சமமான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக இருத்தல் அல்லது
- ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான அரச உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல்.

**தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.**

**ஏனைய தகைமைகள்**

- விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக இஸ்லாமிய சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும், மதிப்பும் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
- தெரிவு செய்யப்படும் அபேட்சகர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படுகின்ற காலப்பகுதிக்காக நியமனம் செய்யப்படுவார்.
- காதியாக நியமிக்கப்படுபவர் தான் நியமனம் பெறும் பிரதேசத்திற்குள் நிரந்தரமாக வசித்தலானது சட்டரீதியான தேவைப்பாடாக கருதப்படும்.

**கொடுப்பனவுகள்**

மாதாந்தக் கொடுப்பனவாக ரூபா 7,500/= மற்றும் உதவியாளர் சேவை, எழுதுகருவிகள் மற்றும் அஞ்சல் செலவுக்காக மாதாந்தம் ரூபா 6,250/= கொடுப்பனவொன்றுமாகச் சேர்த்து மொத்தமாக ரூபா 13,750/= வழங்கப்படும்.

**விண்ணப்பப்படிவங்களை பொறுப்பேற்கும் இறுதித் திகதி**

2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17 ஆம் திகதி

**விண்ணப்பிக்கும் முறை மற்றும் மேலதிக விபரங்கள்**

2026.06.26 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அரச வர்த்தமானி அறிவித்தலுக்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும்.

**சிரேஷ்ட உதவிச் செயலாளர்,**
**காதிப் பிரிவு,**
**நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,**
**த.பெ.இ - 573,**
**கொழும்பு - 12.**

**0112433119 / 0112451159**